**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**<u>கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் இந்தி மொழிக் கற்கைநெறி ஆரம்பம்</u>**

**இந்தியா இலங்கை இடையிலான கல்வி மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுவாக்கும் முக்கியமான ஒரு செயற்பாடாக இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் ஒத்துழைப்புடன் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இந்தி மொழி கற்கைநெறி ஒன்று இன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

2. இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். அத்துடன் பிரதித் துணைவேந்தர் (நிர்வாகம்) பிரிகேடியர் பிரதீப் ரத்நாயக்கா, பிரதி துணைவேந்தர் (கல்வி) பேராசிரியர் சனத் தம்மிக்க, முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி லக்ஷிகா லியனகே, ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள், பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், பீட உறுப்பினர்கள், நிர்வாகத் துறையைச் சேர்ந்த உறுப்பினர்கள், கெடற் படையினர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோரின் பிரசன்னத்துடன் இந்த கற்கைநெறி உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரியர் HGU அட்மிரல் தம்மிக்க குமார ஆகியோரால் கூட்டாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

3. இங்கு உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் அவர்கள், இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பினை கட்டி எழுப்பும் முயற்சிகளில் மொழியின் கலாசார மற்றும் ராஜதந்திர ரீதியிலான முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டினார். அத்துடன் உலகளாவிய ரீதியில் 600 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் இந்தி மொழியானது மாணவர்களுக்கு இந்தியாவின் செழிப்பான இலக்கியம், ஊடகம், தத்துவம் போன்ற துறைகளிலும் அதேபோல தொழில் ரீதியான வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதிலும் பெறுமதியான வாய்ப்புகளை வழங்குவதாக குறிப்பிட்டிருந்த அவர், பல மொழி அறிவினையும் புலமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த கல்வி சூழலை இப்பல்கலைக்கழகம் அர்ப்பணிப்புடன் வழங்குவதாக இங்கு குறிப்பிட்டிருந்தார்.

4. முதலாவது பாரத் - இலங்கை இந்தி சம்மேளனம் 2025 ஜனவரியில் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்க

விடயமாகும். சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்துடன் இணைந்து தொலைக்கல்வி மூலமாக இந்தி மொழியினை கற்பிக்கும் குறித்த திட்டம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

5. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த இந்தி மொழி திட்டம் பட்டப்படிபினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பொருத்தமான ஒரு கற்கை நெறியாக காணப்படும் அதேவேளை இராணுவ மற்றும் சிவில் கல்வியாளர்கள் இதில் இணைந்து கொள்ள முடியும். நிபுணத்துவமிக்க இந்திய வளவாளர்களால் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள் ஊடாக அடிப்படை மொழி, கலாசார தொடர்புகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் உள்ளிட்டவை பாடவிதானங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான மக்கள் தொடர்புகள் மற்றும் இலங்கை இந்தியா இடையில் பரஸ்பர கற்றல் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இந்த இரு நிறுவனங்களும் கொண்டிருக்கும் பரந்தளவான நோக்கினை இத்திட்டம் பிரதிபலிக்கின்றது.

*********

**கொழும்பு,**
**02 ஜூலை 2025**